முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 163/2020

வாதி தரப்பு சாட்சி .. 1

பெயர் .. ஜோதிமணி

தகப்பனார் / கணவர் பெயர் .. துரைசாமி

வயது ..

தொழில் ..

கிராமம் ..

வட்டம் ..

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04ஆம் நாள் புதன்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை

எனது பூர்வீகம் செய்யாறு என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் பூர்வீகம் செய்யார் தான். அவர் எனக்கு தெரிந்தவர். பிரதிவாதிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருக்கிறது என்றால் ஒரேஒரு முறை தான் கொடுத்துள்ளேன். நான் பணம் கொடுத்து 10 வருடம் இருக்குமா என்றால் இல்லை 2017ல் தான் கொடுத்தேன். நான் நேரடியாக பலமுறை பிரதிவாதியிடம் பணம் கேட்டேன்.பணத்தை நான் என் கடையில் வைத்து தான் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது அப்போது சாட்சியாக இருந்தவர் இறந்துவிட்டார். அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை. அந்த பாண்டை நான் தான் எழுதினேன். 10 வருடத்திற்கு முன்பு பிரதிவாதி கடன் வாங்கியதாகவும் அவரிடம் வெற்று காசோலைகளை வாங்கிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது மகன் இளம்பிரையன் ஆகியோர் ஒன்றாக இருக்கிறோம் என்றால் இல்லை, தனித்தனயாக இருக்கிறோம். என் மகன் வாட்டர் பிளாண்ட் தொழில்

செய்து வருகிறார். 10 வருடத்திற்கு முன்பு கடன் வாங்கியதாகவும் அதை பலதவணைகளாக திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் திருப்பி கொடுக்கும்போது வட்டி கொடுப்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும் அதனால் ஏற்கனவே கொடுத்த வெற்றுபாண்டை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் என் மகனை வைத்து குற்றவியல் நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அவர் என்மகனிடம் கடன் வாங்கியிருந்தார். மேற்படி குற்றவியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிக்கு தண்டனை வழங்குவதற்கு முன்பே மேல்முறையீடு ஆரணி நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். அதேபோல் புரோநோட்டு வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்றால் 4 முறை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கையெழுத்து பாண்டில் ஆங்கயலத்தில் உள்ளது என்றால் சரிதான். பாண்டு காலாவதியாகிவிட்டது என்றும் அதனால் தான் அதிலுள்ள கையெழுத்தும் தற்போது உள்ள கையெழுத்திற்கும் மாறுதல் உள்ளது என்றால் அவர் அப்படி தான் மாற்றி கையெழுத்து செய்வார். நான் 36% வட்டி கேட்டதாகவும், அதனால்தான் பிரதிவாதி பணம் திருப்பி தரவில்லை என்றால் சரியல்ல. பாண்டில் எனது வேண்டப்பட்டவரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி கையொப்பமிட்டவர் இறந்துவிட்டார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**